பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 04 2024 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எதிர்க்கட்சிகளின் கூட்டணி, நாட்டை பலவீனப்படுத்தி, பிளவுபடுத்தும் நோக்கத்துடன் செயல்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

2. பிஜேபி பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவதாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

3. ஈரான் சிறைபிடித்த சரக்கு கப்பலில் உள்ள இந்தியர்களை விடுவிப்பது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சருடன், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

4. இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 15 பேர் உயிரிழந்தனர்.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நேற்று இரண்டு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

எதிர்க்கட்சிகளின் கூட்டணி, நாட்டை பலவீனப்படுத்தி, பிளவுபடுத்தும் நோக்கத்துடன் செயல்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

கர்நாடக மாநிலம் மைசூருவில் பிஜேபி மற்றும் மதசார்பற்ற ஜனதாதள வேட்பாளர்களை ஆதரித்து நேற்று மாலை பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கர்நாடக மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசு, மாநிலத்தின் வளர்ச்சியிலும் மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்தவில்லை என்று கூறினார்.

அதிகாரத்திற்கு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் காங்கிரஸ் செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

உலகளவில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்து வரும் சூழலில் வெளிநாடுகளுக்குச் செல்லும் காங்கிரஸ் தலைவர்கள் நாட்டைப் பற்றி தவறான கருத்துகளைத் தெரிவித்து வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிக் கூட்டணியில் உள்ள கட்சிகள் சனாதன தர்மத்திற்கு எதிராக பேசி வருவதாகவும் ஆனால் சனாதன தர்மத்தை யாராலும் அழிக்க முடியாது என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

முன்னதாக இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய மதசார்பற்ற ஜனதா தளத் தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு தேவகௌடா, கடந்த 10 ஆண்டுகளில் உலக அளவில் இந்தியா மீதான மதிப்பு அதிகரித்துள்ளது எனவும் இதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடியே காரணம் எனவும் தெரிவித்தார்.

<<<<>>>>

பிஜேபி பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவதாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

நாக்பூரில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், முந்தைய தேர்தல் வாக்குறுதிகளை பிஜேபி அரசு நிறைவேற்றவில்லை என்றார்.

வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற வாக்குறுதிகள் பற்றி பிஜேபி முறையான தகவல்களை வழங்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

ஊழல் தொடர்பாக காங்கிரஸ் மீது பிஜேபி குற்றம் சாட்டும் அதே வேளையில், ஊழல் குற்றச்சாட்டுகளைக் கொண்ட காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பிரமுகர்கள் 23 பேரை, பிஜேபி இணைத்துக்கொண்டுள்ளதாக திரு மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

<<<<>>>>

இடஒதுக்கீட்டு முறை தொடரும் எனவும் அதை ரத்து செய்ய பிஜேபி யாரையும் அனுமதிக்காது என்றும் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் பந்தாரா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், கலாச்சார நெறிமுறைகளை மீட்டெடுக்கவும், பயங்கரவாதத்தை ஒடுக்கவும் பிஜேபி அரசு செயலாற்றியுள்ளது என்றார்.

நக்சல் தீவிரவாதம் கிட்டத்தட்ட முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஏழைகள், பெண்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை பிஜேபி அரசு மேம்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

சத்தீஸ்கரில் மற்றொரு பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய திரு. அமித் ஷா, மாநிலத்தில் பிஜேபி அரசு பொறுப்பேற்றுள்ள கடந்த நான்கு மாதங்களில் மட்டும், 150-க்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட் செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<>>>>

பிஜேபி தேர்தல் அறிக்கையிலும், பிரதமர் திரு நரேந்திர மோடியின் பிரசாரங்களிலும் பணவீக்கம் மற்றும் வேலையின்மை ஆகிய இரு அம்சங்கள் குறித்து எந்த கருத்தும் இடம்பெறவில்லை என காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்குக் கூட பிஜேபி விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் 30 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று திரு ராகுல் காந்தி கூறியுள்ளார்.

<<<<>>>>

பீகாரில் முதல் கட்ட வாக்குப் பதிவின்போது தேர்தல் நடைபெறவுள்ள ஜமுய், நவாடா, அவுரங்காபாத் மற்றும் கயா மக்களவைத் தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

ஜமுய் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத் சிங், வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஒரே அரசாக பிஜேபி அரசு செயல்பட்டுள்ளது என்றார்.

370 வது பிரிவு ரத்து, அயோத்தி ராமர் கோவில் போன்றவை பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆட்சிக் காலத்தில்தான் நிறைவேறியுள்ளது என்று அவர் கூறினார்.

காங்கிரஸ் கட்சி பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எதிரான கட்சி என்று அவர் குற்றம் சாட்டினார்.

இதனிடையே ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் திரு தேஜஸ்வி யாதவ் கயாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இளைஞர்களின் கனவை எதிர்க்கட்சிக் கூட்டணியால் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்று அவர் கூறினார்.

எதிர்க் கட்சிக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், அக்னிவீர் திட்டம் ரத்து செய்யப்படும் என்றும், ராணுவத்தில் பழைய ஆட்சேர்ப்பு முறை கொண்டுவரப்படும் என்றும் திரு தேஜஸ்வி யாதவ் கூறினார்.

<<<<>>>>

ஏப்ரல் 26ஆம் தேதி இரண்டாம்கட்ட தேர்தலின்போது கேரள மாநிலத்தில் அனைத்து 20 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் அங்கு பிரச்சாரம் தீவிரம் அடைந்துள்ளது.

ஆலத்தூர் மற்றும் ஆற்றிங்கலில் இன்று நடைபெறும் பிரசார கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி, இன்று வயநாடு தொகுதியில் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு சீதாராம் யெச்சூரி காசர்கோடு மற்றும் கண்ணூர் தொகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

கடந்த சில ஆண்டுகளில் கஷ்மீரில் வன்முறை பெருமளவு குறைந்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் மத்திய இணை அமைச்சருமான திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

உதம்பூரில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் பேசிய அவர், காஷ்மீர் பள்ளத்தாக்கில் கல்வீச்சு சம்பவங்கள் இப்போது நடைபெறுவதில்லை என்றார். எல்லைப் பகுதியில் வசிக்கும், மக்களின் நலனுக்காக பிஜேபி அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாகவும் திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

மத்திய அரசின் தவறான நிர்வாகத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத்தலைவர் திரு. ஒமர் அப்துல்லா குற்றம் சாட்டியுள்ளார்.

உதம்பூர் தொகுதியில் நேற்று பிரசாரம் மேற்கொண்ட அவர், ஜம்மு-கஷ்மீர் மக்களுக்கு, மத்திய அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய நிலையில், அவற்றை செயல்படுத்தவில்லை என்று குறை கூறினார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மகாராஷ்டிராவில் ஆளுநர் திரு ரமேஷ் பயஸ், மும்பையில் வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

அரசியல் சாசன சிற்பி பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடங்கி வைத்துப் பேசிய மகாராஷ்டிர ஆளுநர், வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஹரியானாவில் தேர்தல் தொடர்பான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரி திரு அனுராக் அகர்வால் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் சி-விஜில் செயலி மூலம் இதுவரை ஆயிரத்து 666 புகார்கள் வந்துள்ளதாக தெரிவித்தார்.

அவற்றில் 1,383 புகார்கள் உண்மை என கண்டறியப்பட்டு அவற்றின் மீது உரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அதிகபட்சமாக அம்பாலா மாவட்டத்தில் 348 புகார்களும் சிர்சாவில் 367 புகார்ளும் பெறப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரான் சிறைபிடித்த சரக்கு கப்பலில் உள்ள இந்தியர்களை விடுவிப்பது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சருடன், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

அந்தக் கப்பலில் 17 இந்தியர்கள் உட்பட 25 மாலுமிகள் உள்ளனர்.

அவர்களை விடுவிக்கக் கோரி ஈரான் அமைச்சர் திரு. அமீர் அப்துல் லஹியானிடம் திரு. ஜெய்சங்கர் நேற்று மாலை பேச்சு நடத்தினார்.

மத்திய கிழக்குப் பகுதியின் தற்போதைய சூழல் குறித்தும் அவருடன் ஆலோசனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

பதற்றம் மேலும் அதிகரிப்பதை தவிர்த்து பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணுமாறு வலியுறுத்தியதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சருடனும் தொலைபேசியில் பேச்சு நடத்தியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ராஜஸ்தானில் காரும், லாரியும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 2 குழந்தைகள், 3 பெண்கள் உள்பட 7 பேர் உயிரிழந்தனர். சிகார் மாவட்டத்தில் நேற்று இந்த விபத்து நடைபெற்றது.
உத்தரபிரதேசத்தின் மீரட்டைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் காரில் ஹிசார் நோக்கி சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

இந்தோனேசியாவின் தெற்கு சுலாவேசி மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 15 பேர் உயிரிழந்தனர்.

மேலும் சிலரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் படை வீரர்கள் மற்றும் காவல்துறையினர் காணாமல் போனவர்களைத் தேடி வருகின்றனர்.

அப்பகுதியில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது.

தகவல் தொடர்பு துண்டிப்பு, மோசமான வானிலை போன்றவை காரணமாக மீட்பு பணிகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நேற்று இரண்டு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கிர்கிஸ்தானில் நடைபெறும் இப்போட்டியில், மகளிர் 72 கிலோ எடைப்பிரிவில் ஹர்ஷிதாவும் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அஞ்சுவும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் ஆன்டிம் பகலும் மகளிர் 62 கிலோ எடைப்பிரிவில் மனிஷா பன்வாலாவும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

<<<<>>>>

ஒலிம்பிக் தகுதிச் சுற்று மகளிர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் பாலக் குலியா 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் அவர் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இதுவரை 20 இந்திய துப்பாக்கி சுடும் வீரர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

<<<<>>>>

உலகக் கோப்பை ஒற்றையர் டேபிள் டென்னிஸ் போட்டி சீனாவின் மக்காவில் இன்று தொடங்குகிறது.

வரும் 21-ம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தலா 48 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் மனிகா பத்ராவும் ஸ்ரீஜா அகுலாவும் விளையாடவுள்ளனர்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி – சென்னை அணியை வென்றது.

**<<<<The End>>>>**